கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்

அ.வ.எண்.**223/2022**

நாள் : 10.09.2024

வா.சா.1: பாண்டியன்

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:

நான் கடந்த 15 வருடமாக மதுரை திருநகரில் குடியிருந்து வருகிறேன். நான் 10 வருடமாக ரியல் எஸ்டேட் தொழில் செய்துவருகிறேன். பிரதிவாதியை எனக்கு 2 1/2 வருடம் முன்பில் இருந்து தெரியும். பிரதிவாதி இறையருள்நகர் என்ற பெயரில் வீட்டுமனை போட்டுஇருந்தார்கள். நான் பிரதிவாதியிடம் அதில் ஒரு பிளாட் வாங்கினேன். 21.06.2021 ம் தேதி ரூபாய் பத்துலட்சம் வரவோலை கொடுத்தேன்.அடுத்த நாள் என்னிடம் 16 லட்சம் ரொக்கம் கேட்டார். அதை நான் மகேஸ்வரியிடம் கொடுத்து புரோநோட் எழுதி வாங்கினேன். ரியல்எஸ்டேட் தொழில் அடிப்படையில்தான் பிரதிவாதியை தெரியும். நான் தாக்கல் செய்த வழக்குரையில் மேற்சொன்ன விவரங்கள் சொல்லவில்லை. பிராதில் பிரதிவாதி எனது உறவினர் என்றும், அவசர நிமித்தம், சில்லரை கடன்களை தீர்க்கவும், குடும்ப செலவுக்காகவும் 16 லட்சம் கொடுத்தாக சொல்லியிள்ளேன் என்றால், உறவினர் என்று சொல்லவில்லை. ரூபாய் 16 லட்சம் அகமது நகரில் உள்ள பிரதிவாதியின் வீட்டில் வைத்து கொடுத்தேன். வீட்டின் கதவுஎண் ஞாபகம் இல்லை. நான் கொடுக்கும்போது அவரது கணவர் உடன் இருந்தார். அகமதுநகரில் உள்ள வீட்டை 2009 ம் வருடமே பிரதிவாதி கருப்பசாமிநாடார் என்பவருக்கு விற்றுவிட்டார் என்றும், அவர் அந்த வீட்டில் குடியிருக்கவில்லை என்றும் சொன்னால், சரியல்ல. பிரதிவாதி அந்த வீட்டில்தான் இருந்தார். கருப்பசாமிநாடாரும் 2010 ம் வருடமே அந்த வீட்டை ஒரு ஆசிரியைக்கு விற்றுவிட்டார் என்றால், தெரியாது, ஆனால் பிரதிவாதிதான் குடியிருந்தார். 2007 ம் வருடத்திலிருந்து பிரதிவாதி ஸ்ரீவில்லிபுத்தூர் ராஜீவ்காந்தி நகரில் கதவு எண்.131 ல் குடியிருந்துவருகிறார் என்றால், சரியல்ல. நான் விருதுநகர், அகமதுநகரில் கதவு எண்.39/62/1K5 என்ற விலாசத்தில் வைத்து பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால், சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் நானும், பிரதிவாதியும் சேர்ந்து எழுதிக்கொண்ட ஒப்பந்தம்தான். அது பிரதிவாதி தரப்பு சான்றாவணம் **1**. அந்த ஒப்பந்தம் நானும், பிரதிவாதியும், பிரதிவாதியின் கணவரும் சேர்ந்து எழுதிக்கொண்டது என்றால், சரிதான். அந்த ஒப்பந்தப்படி எல்லா பிளாட்களும் பிரதிவாதி விற்றுவிட்டார்

என்றால், சரியல்ல. என்னிடம் கேட்காமல் 11 பிளாட்களை விற்றுவிட்டார். அந்த ஒப்பந்தப்படி பிரதிவாதியும், அவரது கணவரும் நடக்கவில்லை என்று நான் நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் குறிப்பிட்ட ஆள்களுக்கு பிரதிவாதி பிளாட்களை விற்பனை செய்து நான் செலுத்திய தொகை போக மீதி ஒரு லட்சம்தான் எனக்கு வரவேண்டியது உள்ளது என்று நான் பி.வா.சா.ஆ.1ல் பின்பக்கம் எழுதிகொடுத்துள்ளேன் என்றால், அந்த கையொப்பம் என்னுடையதல்ல. பி.வா.சா.ஆ.1ல் 10வது பக்கத்தில் உள்ள கையொப்பம் யார் உடையது என்று தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஒப்பந்தம் 22.06.2021ம் தேதி எழுதப்பட்டது என்றால், சரிதான். வா.சா.ஆ.1 புரோநோட் 22.06.2021ம் தேதி எழுதப்பட்டது என்றால், சரிதான். வா.சா.ஆ.1ம், பி.வா.சா.ஆ.1ம் ஒரே தேதியில் எழுதப்பட்டது என்றால், சரிதான். நான் வா.சா.ஆ.1ன் படி 16 லட்சமும், பி.வா.சா.ஆ.1ன் படி 10 லட்சமுமாக மொத்தம் 26 லட்சம் ஒரே தேதியில் கொடுத்தேன் என்றால், சரிதான். நான் வங்கியில் வைத்திருந்தது ரூபாய் 10 லட்சம், ரொக்கமாக கொடுத்தது ரூபாய் 16 லட்சம். எனக்கு ஒரே தேதியில் 26 லட்சம் ரூபாய் கொடுப்பதற்கான வசதி வாய்ப்புகள் கிடையாது என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1ல் உள்ள பிரதிவாதியின் கையொப்பமும், பி.வா.சா.ஆ.1ல் உள்ள பிரதிவாதியின் கையொப்பமும் வித்தியாசமாக உள்ளது என்றால், சரியல்ல, ஒன்றாகதான் உள்ளது. பிரதிவாதி பிளாட்களை விற்பனை செய்வதை தடுக்கவேண்டும் என்ற எண்ணத்தில் நான் வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்து பிரதிவாதியின் கையொப்பத்தை நானே இட்டு இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ள முத்துகிருஷ்ணனை விசாரித்தால் பிரதிவாதி வா.சா.ஆ.1 ஆவணம் எதிகொடுத்தார் என்ற விவரம் தெரியவரும் என்றால், சரிதான். புரோநோட்டை யார் எழுதினார் என்றால், எனக்கு பெயர் தெரியாது, காளிமுத்துதான் அழைத்துவந்தார். அந்த புரோநோட்டை எழுதிய சாட்சி எந்த இடத்தில் குறிப்பிட்டுள்ளார் செயது அகமது த/பெ.மைதீன்பாட்சா என்பவரை விசாரித்தால் அவரை யார் அழைத்து வந்தார்கள் என்ற விவரம் தெரியவரும். பிரதிவாதி எதிர்வழக்குரையில் நான் கையொப்பத்தை போர்ஜரியாக உற்பத்தி செய்ததாக சொல்லியுள்ளார் என்றால், தெரியாது. பிரதிவாதியின் கையொப்பத்தை கையெழுத்து நிபுணருக்கு பரிசோதனைக்காக பி.வா.சா.ஆ.1 மற்றும் வேறு கையொப்பங்களுடன் ஒப்பீடு செய்ய அனுப்புவதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை. நான் வழக்குமூலத்தில் 21.06.2022ம் தேதி புரோநோட் எழுதிகொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. எனது வழக்குமூலம் தவறானது என்றால், சரியல்ல. நான் 21.06.2022ம் தேதியிலிருந்து

வட்டி கோரியுள்ளேன் என்றால், சரியல்ல. புரோநோட் தேதிக்கு முன் தேதியிலிருந்து நான் வட்டிகோரிய பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல. வழக்குரையிலேயே தேதியை முன்னுக்குபின் முரணாக சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. அதனால் அந்த வழக்கு பொய்யாக உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ல் தற்போது பிரதிவாதி குடியிருக்கும் முகவரியாக ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள ராஜீவ்காந்திநகர் சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். ஆனால் வா.சா.ஆ.1 ல் அந்த விலாசம் சொல்லப்படவில்லை. நான் ரூபாய் 16 லட்சம் ரொக்கத்தை விருதுநகர் அகமதுநகரில் உள்ள வீட்டில்வைத்து கொடுத்தேன். அகமதுநகரில் உள்ள வீட்டில் யார் குடியிருக்கிறார் என்று அழைப்பாணை அழைத்து விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ல் சொல்லப்பட்டுள்ள தேதியில் பிரதிவாதி என்னிடம் ரூபாய் 16 லட்சம் வாங்கிகொண்டு எந்த ஒரு புரோநோட்டும் எழுதிகொடுக்கவில்லை என்றால், சரியல்ல. விருதுநகரில் அகமதுநகரில் வைத்து நான் பிரதிவாதிக்கு 16 லட்சம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. தொழிலில் ஏற்பட்ட கருத்துவேறுபாட்டின் காரணமாக பிரதிவாதியின் கணவரை பழிவாங்கும் எண்ணத்தில் பிரதிவாதியின் கையொப்பத்தை மோசடியாக போட்டு இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால், சரியல்ல. பிரதிவாதியின் கணவர் எனக்கு ராம்குமார் என்பவர் மூலம்தான் அறிமுகம் என்றால், சரியல்ல. நான் பிரதிவாதிக்கு எந்த ஒரு தொகையும் கொடுக்கவில்லை என்றும், அதனால் எந்த ஒரு தொகையும் கேட்க உரிமை இல்லை என்றும் சொன்னால், சரியல்ல. நான் வருமானவரி செலுத்தவில்லை. எனது வங்கிகணக்கை பார்த்தால் எனக்கு ஒரே நாளில் 26 லட்சம் ரூபாய் கொடுத்த வசதி உள்ளதா என்ற விவரம் தெரியவரும் என்றால், சரிதான். இந்த வழக்கு இந்த நீதிமன்ற அதிகாரவரம்பிற்குள் வராது என்றால், சரியல்ல. வழக்குமூலம் தவறானது என்றால், சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.